## அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## Ang Mo Kio Tamil Methodist Church

**21 ஜனவரி 2024 ஞா யிறு ஆராதனை**
21 January 2024 - Sunday Service

† **ஆராதனைக்கு அழைப்பு** — **திருமதி. கோஹிலா**
Call to Worship — Mrs. Kohila

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திருமதி. கோஹிலா**
Prayer — Mrs. Kohila

† **தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

### திவ்விய ஐக்கியத்தில் நடப்போமேயாகில்

1.திவ்விய ஐக்கியத்தில்
நடப்போமேயாகில்
அருள் ஜோதியிலே நிலைப்போம்
வல்ல ஆவியினால் தேவ சித்தஞ் செய்தால்
பெரும் பாக்யம் பெற்றே
வாழுவோம்.

*கீழ்ப்படிவோம் தேவசித்தம்*
*செய்வோம்*
*திருவாக்கை எப்போதும் நம்பி*
*கீழ்ப்படிவோம்.*

2. மேகம் தோன்றுமானால்
அன்பின் சூரியனால்
அது நில்லாமல் மறைந்தேபோம்
சோர்வு சந்தேகமும்
அவநம்பிக்கையும்
அணுகாமலே முன்
செல்லுவோம்

3. எந்த வேளையிலும், இன்ப துன்பத்திலும்
அருள் நாதர் சகாயஞ்
செய்வார்
வரும் சோதனையோ, மன
சஞ்சலமோ
இவை நீக்கியே பாதுகாப்பார்.

4. நம்பி கீழ்ப்படிந்தே
திருப்பாதத்திலே
நம்மை முற்றிலும்
ஒப்புவிப்போம்
பெருநன்மை ஈவார்
அபிஷேகஞ் செய்வார்
தேவ ஆவியைப்
பெற்றுக்கொள்வோம்

† **மாறி வாசித்தல் 3ம் ஞாயிறு** — **சபையார் இணைந்து**
**தேவ ஆராதனை புத்தகம்** பக்கம் *19* — Congregation
"சங்கீதம் 15"

"கர்த்தருடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுபவன் யார்?"

Psalter Reading –Page 19 "Psalm 15"

**தந்தை போற்றி** — **சபையார் இணைந்து**
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Thanksgiving & Pastoral Prayer — Rev. Vijay Joseph

**பரமண்டல ஜெபம்** — **சபையார் இணைந்து**
Lord's Prayer — Congregation

**காணிக்கை பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song — Congregation

### கர்த்தரின் சத்தம் வல்லமையுள்ளது

கர்த்தரின் சத்தம்
வல்லமையுள்ளது
கர்த்தரின் சத்தம்
மகத்துவமுள்ளது
திரண்ட தண்ணீர் மேல்
ஜலப்பிரவாகம் மேல்
தற்பரன் முழங்குகின்றார்
அல்லேலுயா!

1.பலவான்களின் புத்திரரே
பரிசுத்த அலங்காரமாய்
கனம், வல்லமை, மகிமை
கர்த்தருக்கே செலுத்திடுங்கள்
பிதா குமாரன் பரிசுத்தாவியின்
புது ஆசீர்வாதம் பெருக.

2. கேதுரு மரங்களையும்
லீபனோனின் மரங்களையும்
கர்த்தரின் வலிய சத்தம்
கோரமாக முறிக்கின்றது
சேனை அதிபன் நமது
முன்னிலே
ஜெய வீரனாகச் செல்கிறார்.

3. அக்கினி ஜவாலைகளை
அவர் சத்தம் பிளக்கின்றது
காதேஸ் வனாந்திரத்தை
கர்த்தர் சத்தம் அதிரப்
பண்ணும்
ராஜாவாகவே கர்த்தர்
வீற்றிருப்பார்

ராஜரீகமெங்கும் ஜொலிக்கும்.

4. பெண் மான்கள் ஈனும்படி
பெலத்த கிரியை செய்திடும்
காட்டையும் வெளியாக்கும்
கர்த்தரின் வலிய சத்தம்
பெலன் கொடுத்து
சமாதானமீந்து
பரன் எம்மை ஆசீர்வதிப்பார்

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

✝ ***திருமறைப் பாடம்*** — ***Miss. லியோனா***
***யாத்திராகமம் 19 : 1 - 9***
Scripture Reading :
Exodus 19 : 1 - 9 — Miss. Leona

***அருளுரை*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Sermon — Rev. Vijay Joseph

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

***<u>நான் உம்மை உறுதியாக</u>***

***நான் உம்மை உறுதியாக***
***என்றென்றும் பற்றிடுவேன்***
***சமாதானம் பூரணமாய்***
***அளித்து என்றும் நடத்துவீர்***

*1.என் ஆத்துமாவின் வாஞ்சை நீர்*
*என் ஆவி உம்மைத் தேடும்*
*உந்தனின் பாதையில்*
*செம்மையாய் நடத்துவீர்.*

*2. நல் வாசல்கள் திறந்திட*
*உம் தாசர் உள்ளே செல்வார்*
*சத்தியம் காத்திட*
*கர்த்தனே அருள் செய்வீர்*

*3. உம் நியாயங்கள் நிறைவேற*
*உம் வேளைக்காக வந்தோம்*
*தேவனே ராஜனே*
*ஜெயமதைத் தந்திடுவீர்.*

*4. என் கிரியைகள் அனைத்துமே*
*நீர் ஏற்று என்றும் காப்பீர்*
*நடத்தியே தாங்குவீர்*
*சமாதானம் அருள்வீர்*

*5. உம் கைகள் எமக்காய் ஓங்கிட*
*உம் வல்லமை விளங்கும்*
*உம்மையே சார்ந்துமே*
*உம் புகழ் சாற்றிடுவோம்*

***அறிவிப்புகள்***
Announcements

✝ மனப்பாட வசனங்கள் — ***சபையார் இணைந்து***
Weekly Memory Verses — Congregation
Exodus 19 : 5
***யாத்திராகமம் 19 : 5***

***5. இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால் சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள் பூமியெல்லாம் என்னுடையது.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ Indicates Congregation standing